# 05 சிறந்த ஆளிடைத் தொடர்புகளை வாழ்க்கையோடு இணைத்துக்கொள்வோம்

நாம் எமது வாழ்க்கையை வெற்றிகரமாக கொண்டு நடத்துவதற்கு எம்மை சுற்றியிருப்பவர்களுடன் சுமுகமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். மனிதன் ஒரு சமூகப்பிராணி ஆவான். எனவே, அவன் சூழ்நிலையோடு இசைந்து வாழக்கற்றுக் கொள்ளல் வேண்டும்.

இவ் அலகை கற்பதன் மூலம் தனிமையில் ஒருவர் தொடர்புகள் இன்றி வாழும் போது எதிர்நோக்கும் அசௌகரியங்கள் பற்றி அறிந்து கொள்வீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் சிறந்த விருத்தியடைந்த ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்கு பலரின் பங்களிப்பை பயன்படுத்தும் தேர்ச்சியைப் பெறுவீர்கள். அத்துடன் வாழ்க்கையில் ஏற்படும் முரண்பாடுகளை இனங்கண்டு தவிர்க்கவும் தீர்க்கவும் நல்ல ஆளிடைத் தொடர்புகளை பயன்படுத்துவீர்கள்.

## 5.1 சீரான ஆளிடைத்தொடர்பை கையாண்டு வெற்றிகரமாக வாழ்வோம்.

***எனக்கு என்னுடைய தேவைகள் எவ்வளவு முக்கியமோ அதே போல் மற்றவர்களின் தேவைகளும் அவர்களுக்கு முக்கியமாகும்.***


ஆளிடைத் தொடர்பு என்பது மனிதர்களிடையே நடைபெறும் தொடர்பாடல்களைக் குறிக்கும். இதற்கு இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர் அவசியமாகும்.

சிறந்த ஆளிடைத் தொடர்பு என்பது பரஸ்பரம் தொடர்பு கொள்பவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதைக் குறிப்பதாகும். ஆளிடைத் தொடர்பானது சமூக நிலவுகைக்கு அவசியமாகும்.

ஆளிடைத் தொடர்புகள் பல்வேறு மட்டங்களில் இடம்பெறும். சில தொடர்புகள் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் நடைபெறும். அதாவது தாய், தந்தை, சகோதரர்களுக்கிடையில் நடைபெறும். இன்னும் சில நண்பர்களுக்கிடையில் நடைபெறும். இவ்வாறு ஒவ்வொரு தொடர்புகளும் வித்தியாசமானதாக காணப்படும்.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை தொடர்புகள் மாறிக்கொண்டிருக்கும். குழந்தையாக இருந்த போது அவனது தேவைகள் ஒருவிதமாகவும் அவன் வளர வளர அவனது தேவைகள் வேறுவிதமாகவும் காணப்படும். இதனால் குழந்தையாக இருந்த போது நிலவுகின்ற தொடர்புகள் படிப்படியாக அவன் வளர வளர மாறிக் கொண்டிருக்கும். பிள்ளைகளே! உங்களது வாழ்க்கையில் கடந்து போன ஒரு நாளை நினைத்துப்பாருங்கள். நித்திரைவிட்டு எழுந்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரை எத்தனை நபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பீர்கள். வீட்டில் அம்மா, அப்பா, சகோதரர்களுடன் ஆரம்பித்து பின்னர் வீதியில் செல்வோர், பேருந்தில் நடத்துனர், பயணிகளுடன், பாடசாலையில் சக மாணவர்கள், ஆசிரியர்களுடன் ..... இவ்வாறு உங்களது அன்றாட வாழ்வில் பலருடன் தொடர்புகளைப் பேண வேண்டியுள்ளது அல்லவா?





இவ்வாறு பலருடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற பொழுது அத்தொடர்புகள் நல்ல முறையில் அமைதல் வேண்டும். அவ்வாறு நல்ல முறையிலான தொடர்பில் பல பண்புகள் காணப்படும். அவற்றுள் சில பின்வருவனவாகும்.

- தொடர்பில் இருப்பவர்கள் மகிழ்ச்சியை அனுபவிப்பவர்.
- நேர்மையாகவும் பயனுடையதாகவும் தொடர்பு கொள்வர்.
- ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்வர்.
- ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்த முற்படமாட்டார்
- ஒருவரை ஒருவர் பாராட்டுவர்.

## 5.1.1 தனிமையாக வாழ முடியுமா?



மனிதனுக்கு பல்வேறுபட்ட தேவைகள் உண்டு. அத்தேவைகளை தனியே நிறைவு செய்து கொள்ள முடியாது. தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு சிறந்த ஆளிடைத் தொடர்பு பேணுதல் வேண்டும்.

பிள்ளைகளே! எமக்கு உணவு உடை உறையுள் மட்டுமன்றி அன்பு கருணை பாதுகாப்பு போன்றனவும் அவசியமாகிறது. எமது பெற்றோர்களும் சகோதரர்களும் எவ்வாறு எமக்கு தேவையானவற்றை தந்து எமது தேவைகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதனை நினைத்துப்பாருங்கள்.





பிள்ளைகளே! உங்களின் கல்வித் தேவைக்காக நீங்கள் பாடசாலைக்கு வருகின்றீர்கள். ஆசிரியர்கள் உங்களுக்கு தேவையான பாடங்கள் மட்டுமன்றி ஒழுக்கம், விளையாட்டு, கலை போன்ற பல்வேறு விடயங்களுக்கும் வழிகாட்டுகின்றார்கள்

குடும்பம், பாடசாலை எவ்வாறு உங்கள் தேவைகளை நிறைவேற்றுகின்றனவோ அதே போல் உங்களின் ஆன்மீக தேவைகளை நிறைவேற்றுவதில் சமய நிறுவனங்களும் பங்களிக்கின்றன. கோயில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள், விகாரைகளில் நடைபெறும் வழிபாடுகள், விழாக்கள், போதனைகள் எல்லாம் எமக்கு நல்ல பண்புகளை கற்றுத்தருகின்றன. அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கான பயிற்சியையும் தருகின்றன. இதே போல் சமூகத்தில் உள்ள ஏனைய நிறுவனங்களும் ஒவ்வொரு வழிகளிலும் எமது தேவைகளை நிறைவேற்றுகின்றன.

சமூகத்தில் உள்ள எல்லா நிறுவனங்களினதும் உறுப்பினர்களினதும் தொடர்பின் முக்கியத்துவம் பற்றி இப்பொழுது நீங்கள் நன்கு உணர்ந்திருப்பீர்கள். இவ்வாறு நாம் ஏனையவர்களுடன் தொடர்பு கொள்ளாமல் தனிமையாக வாழ்வோமாயின் எவ்வளவு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

ஆளிடைத் தொடர்பிற்கு மொழி ஒரு பிரதான அம்சமாகும். தனிமையாக வாழ்வோமாயின் நாம் பேசும் மொழியைக் கூட திருத்தமாக பேசக்கூட முடியாமல் போகும். அது மட்டுமல்ல எம்மை போன்ற பல மொழி பேசும் நாட்டில் ஏனைய மொழிகளை பேசும் ஆற்றல்கூட இல்லாமல் போய்விடும். நல்ல பழக்கவழக்கங்கள் தலைமை தாங்கும் பண்புகள் போன்றவற்றையும் ஆளிடைத்தொடர்பு மூலம் பெறலாம்.

**செயற்பாடு**

(1) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. நல்ல முறையிலான ஆளிடைத் தொடர்பில் காணப்படும் பண்புகள் யாவை?
2. உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் தனிமையாக செய்யக் கூடிய செயல்கள் யாவை?
3. உங்களுடைய அன்றாட வாழ்க்கையில் தனிமையாக செய்ய முடியாத செயல்கள் யாவை?
4. மூத்தோர் உமக்கு செய்த உதவிகளை பட்டியல்படுத்துக.

## 5.1.2 வாழ்க்கைப் பயணத்தை இலகுவாக்குவோம்

பல சவால்கள் நிறைந்தது தான் வாழ்க்கை. சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க வேண்டும். சவால்களை கண்டு ஒதுங்கவும் கூடாது; பயப்படவும் கூடாது; கவலைப்படவும் கூடாது. சீரான ஆளிடைத் தொடர்பானது வாழ்க்கைப் பயணத்தை இலகுபடுத்தும்.சீரான ஆளிடைத் தொடர்பு மூலம் எமது வேலைகளை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ளலாம்.

*ஒருவர் தவறே செய்திருந்தாலும் ``நீ செய்தது தவறு என்று எப்போதும் கூறாதீர்கள். மாறாக எது சரி என்று அவர் புரிந்து கொள்ள உதவி செய்யுங்கள்.*

**பின்வரும் உரையாடலை வாசியுங்கள்.**

அன்று சனிக்கிழமை தரம் 10 ல் கல்விகற்கும் மாணவன் ஜோன்சன் பிரத்தியேக வகுப்பிற்கு செல்ல ஆயத்தமானான்...

தாய் :- மகன் நீங்கள் வகுப்பு முடிந்து வரும் பொழுது மின்சார கட்டணத்தை செலுத்தி விட்டு வரவும். இதோ பணமும் மின்சார பட்டியலும்.

ஜோன்சன் :- நல்லது அம்மா. நான் மின்சார கட்டணத்தை செலுத்திவிட்டு வருகின்றேன்.

தாய் :- இன்று பணம் செலுத்த வேண்டிய இறுதி நாள். எனவே மறக்காமல் வங்கியில் பணத்தை செலுத்திவிடு மகனே.

ஜோன்சன் :- நிச்சயமாக பணத்தை செலுத்துகிறேன் அம்மா.

பிரத்தியேக வகுப்பு முடிந்தவுடன் நண்பர்களுடன் சிறிது உரையாடி விட்டு பேரூந்தில் வங்கிக்குப் புறப்பட்டான். சனநெருக்கடியால் வழியில் தாமதம் ஏற்பட்டு விட்டது. பேருந்திலிருந்து இறங்கி விரைவாக வங்கி நோக்கி ஜோன்சன் செல்லும் பொழுது வங்கி பூட்டப்பட்டு இருப்பதையும் அங்கு காவலாளி கடமையில் இருப்பதையும் கண்டான். அவன் காவலாளியிடம் சென்று...

ஜோன்சன் :- ஐயா! தயவு செய்து என்னை மன்னிக்கவும்.

காவலாளி :- என்ன விடயமாக நீர் வந்தீர்?

ஜோன்சன் :- நான் மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டும்.

காவலாளி :- நேரம் பிந்தி விட்டது இனிக் கட்ட முடியாது திங்கட்கிழமை வாரும்.

ஜோன்சன் :- ஐயா, நான் சொல்லும் விடயத்தை தயவு செய்து கேட்க முடியுமா?

காவலாளி :- சரி சொல்லும்.

ஜோன்சன் :- இன்று மின்சார கட்டணம் செலுத்த வேண்டிய இறுதி நாள் பேருந்தில் வரும்பொழுது சனநெருக்கடியில் சற்று தாமதித்து விட்டது. இன்று கட்டணம் செலுத்தாவிட்டால் எமது வீட்டிற்கு மின்சாரத்தை துண்டித்து விடுவார்கள். எனவே, தயவு செய்து கட்டணம் செலுத்த அனுமதி தாருங்கள்.

காவலாளி :- (சிறிது நேரம் யோசித்து விட்டு) சரி இன்று உம்மை அனுமதிக்கிறேன் இனிமேல் நேரத்துடன் வர வேண்டும்.

ஜோன்சன் :- நன்றி ஐயா.

**மேற்படி உரையாடலில் இருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?**

ஜோன்சன் என்ற அந்த மாணவன் நல்ல முறையில் அந்தக் காவலாளியிடம் உரையாடியதன் மூலம் தனது வேலையை முடித்து விட்டான். இவ்வாறான சந்தர்ப்பங்கள் உங்களுக்கும் ஏற்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்கள் நல்ல முறையில் உரையாடி உங்கள் வேலைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பயன்மிகு பணிகளை செய்வதற்கு சிறந்த ஆளிடைத் தொடர்பு எமக்கு உதவுகின்றது. உதாரணமாக; உங்கள் வகுப்பறையை அழகுபடுத்தி, சுத்தமாக வைத்திருக்க வேண்டுமாயின் நீங்கள் செய்ய வேண்டியதென்ன? தனி ஒரு மாணவனால் செய்ய முடியுமா? சிந்தித்துப்பாருங்கள். வகுப்பு மாணவர்கள் எல்லோரும் வகுப்பாசிரியருடன் சேர்ந்து கலந்துரையாடி செய்யவேண்டிய வேலைகள், தேவையான பொருட்கள் போன்றவற்றை பட்டியல்படுத்த வேண்டுமல்லவா?



எல்லோரும் சேர்ந்து கலந்துரை-யாடிய பின்பு மாணவர்கள் குழுக்களாக பிரிந்து ஒவ்வொரு குழுவும் தமக்குரிய வேலைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது-பற்றி கலந்துரையாட வேண்டு-மல்லவா? இவ்வாறு எல்லோரும் ஒன்றாகவும் குழுக்களாகவும் ஒருவர் ஒருவருடன் தொடர்பு கொள்வதன் மூலம் வகுப்பறையை சுத்தப்படுத்தி அழகுபடுத்தும் பணியானது இலகுவாக நிறைவேறும். இதனால் நேரமும் பணமும் விரையமாவது தடுக்கப்படுகிறது. இதே போல் பாடசாலையில் மட்டுமன்றி சமூகத்திலும் பல்வேறு பணிகளை ஆற்ற வேண்டிய நிலை காணப்படுகிறது. சிறப்பான ஆளிடைத் தொடர்பினை பேணுவதன் ஊடாக சமூகத்திற்கும் பல பணிகளை இலகுவாக செய்யலாம். இதனால் சமூகமும் நாமும் விருத்தியடையலாம்.



சிறப்பான ஆளிடைத் தொடர்பு மூலம் பலரின் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். வாழ்க்கைப் பயணத்தில் பலரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எமக்கு ஏற்படும். நாம் சந்திக்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறான திறமைகளை கொண்டிருப்பர். அது மாத்திரமன்றி, ஒவ்வொரு நபர்களுக்கும் கடமைகளும் பொறுப்புக்களும் உண்டு. நாம் தனித்து இன்றைய உலகில் எதனையும் சாதித்து விட முடியாது. விரும்பியோ விரும்பாமலோ எமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பலரிடம் நாம் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. எனவே நல்ல முறையில் தொடர்பினை பேணி பலரின் ஒத்துழைப்பைப் பெற்று அதன் ஊடாக எமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளலாம்.



இடைத்தொடர்புகள் மூலம் நல்ல அனுபவம் கிடைக்கின்றது. அனுபவங்கள் மூலம் பெறும் அறிவு வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்-பங்களில் எழும் சவால்களை எதிர்கொள்-வதற்கு உதவுகின்றது. உதாரணமாக சிறப்பான கல்வி சான்றிதழ்களை கொண்டி-

ருப்பவர்கள் கூட சில வேளைகளில் தொழிலுக்கான நேர்முகப்பரீட்சையின் போது பயம், வெட்கம், தெளிவில்லாத சொற்பிரயோகம், பதற்றம் ..... போன்ற காரணிகளினால் தொழில் பெறும் வாய்ப்பை இழக்கின்றனர்.

தொழில் என்பது வாழ்க்கைப் பயணத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே, தொழிலைப் பெற்றுக் கொள்வதற்கு கல்வி அறிவு மாத்திரமன்றி நேர்முகப் பரீட்சைகளிலும் சிறப்பாக முகம் கொடுக்க வேண்டுமென்பதும் முக்கியமாகும். சீரான ஆளிடைத் தொடர்புடையவர்கள் நேர்முக பரீட்சைகளை இலகுவாக வெற்றி கொள்வர். ஏனெனில் ஆளிடைத்தொடர்பு மூலம் பெற்ற அனுபவம் காரணமாக பதற்றம், பயம், வெட்கம் போன்ற காரணிகள் அவர்களைப் பாதிக்கமாட்டாது.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு காலகட்டங்களிலும் வெவ்வேறு வகையான சவால்கள், பிரச்சினைகள் வரும் பொழுது ஆளிடைத்தொடர்பின் மூலம் பெற்ற அனுபவம் அவரவர்களின் சவால்கள், பிரச்சினைகளுக்கு கைகொடுக்கும்.

**செயற்பாடு**

(01) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1. சீரான ஆளிடைத்தொடர்பு மூலம் உமக்கு கிடைக்கும் அனு கூலங்கள் எவை?
2. ஆளிடைத் தொடர்பு வெற்றிகரமாக அமையாவிடின் ஏற்படும் பிரச்சினைகள் எவை?

(02) நீர் மேற்கொண்ட சீரான ஆளிடைத்தொடர்பு பற்றி சக மாணவர் களுடன் கலந்துரையாடுக.

## 5.1.3 வெற்றிகரமான ஆளிடைத் தொடர்பை உருவாக்கும் நுட்பமுறைகள்

*மற்றவர்களைப் பேசவிடுங்கள்... அதில் அவர் பரம திருப்தி அடைவார்... உங்களை மதிப்பார்... அதன் பிறகு நீங்கள் சொல்வதை அவர் கேட்பார்*

சிறந்த ஆளிடைத் தொடர்பை உருவாக்க கவனமாக செவிமடுத்தல், ஏனையவருக்கு மதிப்பளித்தல், பொருத்தமான மொழிப்பிரயோகம் போன்ற தொடர்பாடல் திறன்கள் முக்கியமானவையாகும்.

**தொடர்பாடல் என்பது கருத்துக்களையும் தகவல்களையும் பகிர்ந்து கொள்ளுதல் எனலாம்.**

கருத்துக்களும் தகவல்களும் சொல்வது அல்லது அனுப்பப்படுவது மட்டுமன்றி அவை கேட்கப்பட்டு, பெறப்பட்டு விளங்கிக்கொள்வதிலேயே தொடர்பாடலின் வெற்றி தங்கியுள்ளது.

பயனுறுதிமிக்க ஆளிடைத்தொடர்பை பேணுவதற்கு கவனமாக செவிமடுத்தல் முக்கியமாகும். காதால் கேட்பது மட்டும் செவிமடுத்தல் ஆகாது. மனதை ஒரு முகப்படுத்தி பேசுபவரின் மையக்கருத்து என்ன? அவரின் உணர்வுகள் எப்படியுள்ளன? எனக் கவனித்து கேட்பதையே கவனமாக செவிமடுத்தல் எனலாம்



கண்களால் பார்த்துப் பேசுதல் வேண்டும். ஒருவர் ஒரு திசையிலும் மற்றவர் இன்னொரு திசையிலும் பார்ப்பார்களாயின் உடல் ரீதியாக எடுத்துக் காட்டும் உணர்வுகளை விளங்கிக் கொள்ள முடியாது.

செவிமடுக்கின்ற பொழுது பொருத்தமான கேள்விகளை கேளுங்கள். கேள்வி கேட்பது நீங்கள் கவனமாக செவிமடுக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்தும். இதனால் பேசுபவர் ஊக்கம் பெறுவர். தனது விடயத்தை பேசி முடிக்கும் வரை அமைதியாக இருங்கள். ஏனெனில் கதைத்தால் செவிமடுக்க முடியாது. கவனமாக செவிமடுக்காவிட்டால் சிறந்த தீர்மானங்களை எடுக்க முடியாது.

பயனுறுதி வாய்ந்த ஆளிடைத் தொடர்பை உருவாக்கும் மற்றொரு அம்சம் பொருத்தமான மொழிப் பயன்பாடாகும். நாம் பேசுகின்ற மொழியில் உள்ள நல்ல சொற்களை பயன்படுத்த வேண்டும். நாம் இனிமையாக பேச வேண்டும். அதன் மூலம் எம்மிடையே சிறந்த ஆளிடைத்தொடர்பை உருவாக்கிவிடலாம்.

**பின்வரும் உரையாடலை வாசியுங்கள்**

**உரையாடல்: 01**

ஒருவர் :- இது என்னுடைய மேசை நீ எழும்பிப் போ!

மற்றவர் :- நீ யாரடா! என்னை போகச் சொல்ல

ஒருவர் :- நான் தான் முதல் வந்தனான். ஆகையால் நான்தான் இருப்பேன் நீ போடா.

மற்றவர் :- மடையா! நான் போகமாட்டேன். முடிந்தால் செய்கிறதை செய்து பார்

**உரையாடல்: 02**

ஒருவர் :- தயவு செய்து உம்முடைய பென்சிலை எனக்கு தர முடியுமா?

மற்றவர் :- ஆம் நிச்சயமாக.

ஒருவர் :- மிக்க நன்றி .

மற்றவர் :- நாங்கள் நண்பர்கள் தானே! ஒருவருக்கொருவர் உதவிசெய்யத் தானே வேண்டும்.

மேலே கூறப்பட்ட இரண்டு உரையாடல்களிலும் முதலாவது உரையாடலில் பயன்படுத்திய மொழிப் பாங்கு பொருத்தமற்றதாகும். இது பிரச்சினைகளையும் மகிழ்ச்சியற்ற சூழலையும் உருவாக்க கூடியதாகும். இரண்டாவது உரையாடலில் நல்ல சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், நட்புறவான உரையாடலாகவும் அமைந்துள்ளது. இது ஆளிடைத் தொடர்பை வலுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

நாம் கருத்துக்களை பரஸ்பரம் பரிமாறுகின்ற போது ஏனையவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும். அப்போது சிறந்த ஆளிடைத் தொடர்பு உருவாகும். உதாரணமாக மாணவ மன்றங்கள், கிராமிய சங்கங்கள், இலக்கிய மன்றங்கள் போன்றவற்றில் கூட்டங்கள் நடைபெறுகின்றபோது எல்லோரும் தத்தமது கருத்துக்களை முன்வைப்பார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவரினதும் கருத்துக்கு மதிப்பளிக்கின்ற போது கூட்டமும் அமைதியாக நடைபெறும். நல்ல தீர்மானங்களும் எடுக்கப்படும். உறுப்பினர்களிடையே நல்ல உறவும் ஏற்படும்.



மேலும், சிரித்த முகத்துடன் உரையாடுதல், வாழ்த்துக்கள் தெரிவித்தல், வணக்கம் சொல்லுதல், மற்றவர்களின் தேவையை அறிந்து உதவி செய்தல், உணர்வுகளை கட்டுப்படுத்தல் போன்ற நுட்பங்களை கையாள்வதன் மூலம் வெற்றிகரமாக ஆளிடைத் தொடர்பை பேணலாம்.

**செயற்பாடு**

(1) 1 நீங்கள் யாரையாவது அணுகி கருமமாற்ற வேண்டியிருப்பின் அதனை மேற்கொள்ளும் முறையை நடித்துக் காட்டுக.

2. நீங்கள் வீதியில் ஓடும் பொழுது தற்செயலாக ஒருவருடன் மோதுகிறீர்கள். அதனால் அவரின் கையில் இருந்த குளிர்பான போத்தல் விழுந்து உடைந்து விட்டது. இச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு நடந்து கொள்வீர் என நடித்துக் காட்டுக

(02) வெற்றிகரமாக ஆளிடைத் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய நுட்ப முறைகளை மாணவர்கள் குழுக்களாக கலந்துரையாடி வகுப்பில் சமர்ப்பிக்குக.

## 5.2 முரண்பாடுகளற்ற உலகை உருவாக்குவோம்

இது வரை நீங்கள் தனிப்பட்டவர்களுக்கு இடையே சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தி வாழ்க்கையை எவ்வாறு வெற்றிகரமாக ஆக்கலாம் என்பது பற்றிக் கற்றீர்கள். இப்போது நாம் வாழும் சூழலில் அதாவது வீடு, பாடசாலை, சமூகம் என்பனவற்றில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை அறிந்து அவற்றைத் தீர்ப்பதன் மூலம் அல்லது குறைப்பதன் மூலம் எவ்வாறு சீரானதொடர்புகளை உங்களுக்குள் ஏற்படுத்தலாம் என்பது பற்றி அறியலாம்.

### எமக்குள் முரண்பாடு எதற்கு?

பலதரப்பட்ட குணப்பண்புகள் தேவைகளையுடைய மனிதர்கள் வாழும் சமூகம் ஒன்றில் நாம் வாழுகின்றோம். எல்லா இடங்களிலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஏதோ வகையில் முரண்பாடுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. முரண்பாடுகளும் வன்முறைகளும் மனித வரலாறு முழுவதும் இருந்து வந்துள்ளன. ஆனால் கடந்த கால சமூகத்திலும் பார்க்க நாம் வாழும் இன்றைய சமூகங்களில் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் முரண்பாடுகளும் பிரச்சினைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவ்வாறு முரண்பாடுகளும் சச்சரவுகளும் ஏற்படுவது வாழ்க்கையின் ஓர் அங்கமாகி விட்டுள்ளது.

நீங்கள் நாளாந்தம் ஊடகங்களின் மூலம்பெறுகின்ற செய்திகளைப் பாருங்கள். அவற்றுள் அதிகமானவை முரண்பாடுகள் பற்றியனவாகவே உள்ளன. அதேபோன்றே உங்களது சூழலிலும் முரண்பாடுகள் நடந்துவருவதையும் நீங்கள் அறிவீர்கள். எனவே முரண்பாடு என்றதும் உங்கள் மனதில் தோன்றுகின்ற கருத்து என்ன?

***முரண்பாடு என்பது-***

- *தனியாட்களுக்கிடையே வேற்றுமை அதிகரிப்பினாலும் சமூக வேறுபாடுகளாலும் ஏற்படும் சச்சரவு அல்லது பிணக்கு ஆகும்.*
- *இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே அல்லது குழுக்களுக்கிடையே உணரக்கூடிய பொருத்தமற்ற மோதல் நிலையாகும்*
- *ஏனையோரைத் துன்புறுத்துகின்ற அல்லது காயப்படுத்துகின்ற அல்லது தீங்கிழைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும்.*

*"முரண்பாடு" என்பது நபர்களுக்கு இடையே அல்லது குழுக்களுக்கிடையே உடன்பாடின்மை - வாக்குவாதம் - பிணக்கு நிலை -கலவரம் -போராட்டம் - குழப்பம் என்பன போன்ற வடிவில் ஏற்படுவதாகும்*

*"முரண்பாடு" ஒத்துழைப்பு ஒற்றுமை இணக்கம் அமைதி மற்றும் சமாதானம் போன்றவற்றுக்கு எதிரானதாகும்.*

இப்பொழுது முரண்பாடு என்றால் என்னவென்று உங்களுக்கு விளங்குகின்ற தல்லவா? முரண்பாடு மகிழ்ச்சியற்ற உணர்வைத் தோற்றுவிக்க கூடியது என்பதுடன் தீயதுமாகும் என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

### முரண்பாடு தோன்றுவதற்கான காரணங்கள்

நாம் வாழும் சமூகத்தில் பலவகையான முரண்பாடுகளும் பிரச்சினைகளும் மோதல்களும் தோன்ற முடியும். உலகம், நாடுகள், சமூகம், குடும்பம் மற்றும் தனியாள் என அனைத்தும் முரண்பாட்டுச் சூழலுக்குள்ளேயே அமைந்துள்ளன என்று வாழ்க்கைத் தேர்ச்சிப்பாட ஆசிரியர் மாணவர்களுக்கு முரண்பாடு பற்றி விளக்கிக் கொண்டிருந்தார்....

மாணவர் தாம் அனுபவரீதியாக எதிர்நோக்கிய முரண்பாடுகள் பற்றிக் கூறிக்கொண்டிருந்தனர்...அப்போது மாணவர்களுள் ஒருவர் ஆசிரியரை நோக்கி "சேர்! முரண்பாடுகள் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம் அல்லவா?" என வினவினான்....

அதற்குப் பதிலளித்த ஆசிரியர் "ஆம் நிச்சயமாக! அதிகரித்து வரும் சனத்தொகை, வளங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றமை, அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மக்களிடையே போட்டி ஏற்படுகின்றமை, குடும்பங்களின் வறுமை நிலை, ஒழுக்கங்கள் விழுமியங்களை பின்பற்றாது விடுதல், யுத்த பயங்கரவாத சூழல் போன்ற காரணங்களால் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இப்போது புரிக்கின்றதா மாணவர்களே!" என்று விளக்கினார் ஆசிரியர்.

இதன் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளும் விளக்கம் யாது? முரண்பாடுகள் தோன்றுவது தொடர்பில் பல காரணங்கள் இருக்க முடியும் அல்லவா?

சிந்தித்துப் பாருங்கள்! உங்களுடன் மிகவும் நெருக்கமாக வாழ்ந்த உங்கள் நண்பன் அல்லது நண்பி அல்லது உங்கள் வீட்டாருடன் ஒட்டுறவாக பழகிய அயல்வீட்டார் எவ்வாறு படிப்படியாக கருத்து வேறுபட்டு உங்களுடன் கோபமாகி விரோதமடைந்து இறுதியில் எவ்வாறு எதிரிகளாக மாறுகின்றார்.... என்பதை உற்று நோக்குங்கள். இது போன்று முரண்பாடுகள் ஏற்படுவது நமக்கும் சமூகத்துக்கும் ஆரோக்கியமானதல்ல. எனவே தான் முரண்பாடுகளைக் களைய வேண்டும்.

## வீட்டிலும் பாடசாலையிலும் ஏற்படும் முரண்பாடுகள்

சமூகத்தில் பரவலாக முரண்பாடுகள் ஏற்படுகின்ற போதிலும் பிள்ளைகள் என்ற வகையில் உங்களுக்கு முரண்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ள பிரதான இடங்களாக வீடும் பாடசாலையுமே காணப்படுகின்றன.

“வீடுகளில் ஏற்படும் முரண்பாடுகள் பாடசாலைகளில் ஏற்படும் முரண்பாடுகள்” குறித்து கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆசிரியர் இரு மாணவ குழுக்களுக்கு ஆலோசனை வழங்கினார். அதற்கமைய குழுக்கள் இரண்டும் கலந்துரையாடலில் ஈடுபட்டன. முதலாவது குழு கலந்துரையாடிய பின் “வீடுகளில் ஏற்படும் முரண்பாடுகள் பற்றி பின்வரும் அம்சங்கள் அக்குழுவின் தலைவனான வசந்தனால் முன்வைக்கப்பட்டது.

- ☞ பெற்றோரிடமிருந்து பெறுகின்றவை குறித்து சகோதர சகோதரிகளிடையே பொறாமை போட்டி ஏற்படல்.
- ☞ பெற்றோருடன் பிள்ளைகள் எதிர்மறையாக முரண்படல்.
- ☞ பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் பிரிக்கப்படுதல்.
- ☞ தாய் தந்தையர்களுக்கு இடையிலான முரண்பாடு குடும்ப உறுப்பினர் ஒருவரை பழி சுமத்துதல்.
- ☞ குடும்ப உறுப்பினர் ஒருவரை ஒருவர் பழி சுமத்துதல்.
- ☞ சிறுவர்கள் மீது துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்படல்.
- ☞ நண்பர்களைச் சந்திப்பதற்கும் அவர்களுடன் விளையாடுவதற்கும் சுதந்திரம் மறுக்கப்படுதல்.

அடுத்து இரண்டாவது குழுவின் தலைவியான பாத்திமா அஸ்ரா பாடசலையில் ஏற்படும் முரண்பாடுகள் பற்றி பின்வரும் விடயங்களை முன்வைத்தார்.

- ☞ சக மாணவர்கள் மீது பட்ட பெயர்கள் சூட்டுதல்.
- ☞ மற்றைய மாணவர்கள் மீது பழி சுமத்துதல்.
- ☞ மாணவர்களுக்கு இடையிலும் மாணவ குழுக்களுக்கு இடையிலும் சண்டைகள் ஏற்படுதல்.
- ☞ மாணவர்கள் - ஆசிரியர் புரிந்துணர்வு இல்லாதிருத்தல்.
- ☞ பொருத்தமான நண்பர்கள் கிடைக்காமல் வகுப்பில் தனிமைப்படல்.
- ☞ பாடத்தில் அதிகப்புள்ளியைப் பெறுவதில் மாணவர்களிடையே போட்டா போட்டி.

மேற்படி விடயங்களை அவதானித்தீர்களா? வீட்டிலும் பாடசாலையிலும் ஏற்படும் முரண்பாடுகளைப் பற்றிய தெளிவு உங்களிடத்தில் இதன் மூலம் ஏற்பட்டிருக்கும். இவ்வாறான முரண்பாடுகளும் சச்சரவுகளும் தோன்றுவதனால் ஏற்படக் கூடிய விளைவு அபாயகரமானவை. இருவருக்கிடையே அல்லது ஒரு சிலருக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள் முழுச் சமுதாயத்தையும் சீர்குலைத்து நிலை குலைய செய்துவிடும்.

எனவே, முரண்பாடுகளைச் சரியான வகையில் அடையாளம் கண்டு அவற்றின் தன்மையை விளங்கி முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிப்பது அவசியம்.

**செயற்பாடு**

(1) செய்திப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் முரண்பாடு தொடர்பாக வெளிவரும் விபரங்களை சேகரித்து ஆசிரியரின் உதவியுடன் கலந்துரையாடுக.

(2) மாணவர்கள் குழுக்களாக இயங்கி முரண்பாடுகள் உருவாவதற்கான காரணங்களை பட்டியற்படுத்துக.

(3) உங்களது வகுப்பு மாணவர்களிடையே கடந்த காலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளை அறிந்து, அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டது என்பது பற்றிக் கலந்துரையாடுக.

## 5.2.2 முரண்பாடுகளை தீர்ப்பது எப்படி ?

முரண்பாடுகள் தனிப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களோடு தொடர்புடையன. மனிதன் ஒரு சமூகப் பிராணியாவான். அவன் நிச்சயமாக குடும்பம் - உறவினர்கள் -நண்பர்கள் - சமூகம் என்ற ரீதியில் தொடர்பினைக் கொண்டவனாவான். எனவே முரண்பாடுகளை தனியாட்களுக்கிடையே சீரான இடைத்தொடர்பு மூலமே தீர்க்கலாம். முரண்பாடுகளை குறைப்பது அல்லது நீக்குவது தொடர்பில் பின்வரும் நுட்பங்களை நாம் பயன்படுத்தலாம்.

- ☞ முரண்பாட்டுடன் தொடர்புடையவர்களின் மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தச் செய்தல்.
- ☞ தொடர்புடையவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துதல்.
- ☞ சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.
- ☞ சம்பந்தப்பட்டவர்களுடன் மனந்திறந்து பேசுதல்.
- ☞ முரண்பாட்டுக்குரியவருடன் மனிதாபிமானத்துடன் பழகுதல்.
- ☞ முரண்பாட்டை தீர்ப்பதற்கு தகுதியான நடுவரை அல்லது உதவியாளரை பெற்றுக் கொடுத்தல்.

இவற்றின் மூலம் எம்மிடையே சிறந்த ஆளிடைத் தொடர்புகளை உருவாக்கி வாழலாம். குடும்ப உறுப்பினர்களுக்கிடையே, நண்பர்களுக்கிடையே, சமூகத்த வர்களுக்கிடையே பரஸ்பரமான தொடர்பும் நிலைபெறும். முரண்பாடு தவிர்க்கப்படுவதற்கும் தீர்க்கப்படுவதற்கும் நீங்கள் ஏனையவர்களோடு கொண்டுள்ள தொடர்பு துணைபுரியும் அல்லவா?

**செயற்பாடு**

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக?**

**(1) முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான பல்வேறு வழிகளை குறிப்பிடுக.**

**(2) நீங்களோ அல்லது உங்களுக்கு அறிமுகமான ஒருவரோ பிறிதொருவருடன் ஏற்பட்ட முரண்பாட்டை தீர்த்துக் கொண்ட முறையைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

**சாரம்சம்**

☞ *நபர்களிடையே நடைபெறும் பரஸ்பர தொடர்பின் மூலம் அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யபடுமானால் அது சிறந்த ஆளிடைத்தொடர்பாகும். ஆளிடைத் தொடர்பானது மனிதன் வளர்ச்சியடைய மாறிக்கொண்டே இருக்கும். ஏனையவர்களிடம் தொடர்பின்றி மனிதன் தனிமையாக வாழ்வானாயின் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.*

☞ *மனிதனுடைய விருத்தியில் பலரினதும் பங்களிப்பும் அவசியமாகும். சிறப்பான ஆளிடைத் தொடர்பு நலிவடையுமானால் முரண்பாடுகள் தோன்றும். முரண்பாடுகள் தோன்றுகின்ற பொழுது அவற்றினை தீர்ப்பது அவசியமாகும். அதற்கு பல நுட்பங்களைப் பின்பற்றலாம். முரண்பாட்டை தீர்ப்பதற்குரிய நுட்பங்களை சரியாகப் பயன்படுத்தி முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதன் மூலம் நாம் மகிழ்ச்சியாக வாழ முடியும்.*